டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் மா.சுப்பிரமணியன் - காரம்பாக்கம் கணபதி சிறப்புரை!

# மதுரவாயல் வடக்கு பகுதி இளைஞரணி சார்பில் மாநாடு தீர்மான விளக்க பொதுக் கூட்டம்!

## எம்.பி. நவராஜ் தலைமை! எம்.எம்.ஜெயரத்தினம் வரவேற்புரை!

சென்னை, பிப். 17-

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் மாநில இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு தீர்மானங்கள் விளக்க தெருமுனை பொது கூட்டம் இன்று 17.2.2024 மாலை முகப்பேர் 92 வது வட்டத்தில் உள்ள 20/ஏ பஸ் நிலையம் அருகே உள்ள அறிஞர் அண்ணா சிலை அருகே நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மதுரவாயல் வடக்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் எம்.பி.நவராஜ் தலைமை வகிக்கிறார்.

மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11 வது மண்டலகுழு தலைவர் நொளம்பூர் வே. ராஜன் முன்னிலையில்

வட்ட கழக செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம், எம்.ஏ.செந்தில்சுரேஷ், கே.குமரேசன், எம்.சி.எழிலரசு, எஸ்.சங்கர் கணேஷ், எம்.பி.நவகுமார் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

கழக பொருளாளர் நாடாளுமன்ற திமுக குழு தலைவர் டி.ஆர்.பாலு, தலைமை கழக பேச்சாளர் ஆ.ச.பெருநற்கிள்ளி, சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா சுப்பிரமணியன், மதுரவாயல் சட்ட மன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் விருகம்பாக்கம் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா மற்றும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், மாவட்ட அணிகளில் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி, கழக, நிர்வாகிகள், வட்ட, கழக, செயலாளர்கள், மாவட்ட கழக பிரதிநிதிகள் பகுதி அணிகளில் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

---

திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில்

# திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் மாணவர்களுக்கான போட்டி!

## அமைச்சர் ஆர்.காந்தி - எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. பங்கேற்பு!

திருவள்ளூர் பிப் 17;-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முத்தமிழறிஞர் கலைஞரின் கவிதைகள் திரைப்பட மற்றும் நாடக வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி இன்று 17-02-2024 சனிக்கிழமை காலை 9.00 மணி அளவில் திருத்தணியில் உள்ள புஷ்பாம்மாள் திருமண மண்டபத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட அமைப்பாளர் மத்தூர் எஸ்.பன்னீர்செல்வம் வரவேற்புரை ஆற்றுகிறார். கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை நிர்வாகிகள் பிரசன்னா குமார், ராஜேந்திர குமார், மணிகண்டன், முனிகிருஷ்ணன், புருஷோத்தமன், பாண்டியன், அன்புமணி கோபி, செங்குட்டவன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி போட்டியை துவக்கி வைக்கிறார்.

இதில் முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்பி, திருவள்ளூர் சட்ட உறுப்பினர் விஜி. ராஜேந்திரன், மாநில செயலாளர் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை இறையன்பன் குத்தூஸ், மாநிலத் துணைச் செயலாளர் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை கவிஞர் நன்மாறன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கினார்கள் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும்கலந்து கொள்கிறார்கள்.

முடிவில் மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.சின்னா நன்றி கூறுகிறார்.



சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி 148வது வட்ட இளைஞரணி சார்பில் இளைஞரணி மாநாடு தீர்மானங்கள் விளக்க தெருமுனை கூட்டம்* மேட்டுக்குப்பம் சி.டி.என். நகரில் வட்ட இளைஞரணி ஆர்.தியாகராஜன் தலைமையிலும் 148வது வட்டக் கழக செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ்ராஜ் முன்னிலையிலும் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தலைமை கழக பேச்சாளர் தக்கோலம் தேவபாலன் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். உடன் மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன், ஒன்றிய செயலாளர் அ.ம.துரைவீரமணி, பொதுக்குழு உறுப்பினர் வ.செல்வகுமார், வே.மதியழகன் இரா.பால்பாண்டியன் எஸ்.பாரதி கே.ராஜி, த.ரமேஷ், சி.சுந்தர், எஸ்.அப்பன் (எ) சத்தியமூர்த்தி, தி.சார்லஸ் ஆர்.ராதாசெல்வம் எம்.இ.ஸ்டாலின், செ.ரவி,ச.சங்கர்கணேஷ், எம்.மதன்ராஜ், ஆர்.எம்.முபாரக், டி.ராஜேஷ், இரா.பா.உதயகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

எம்.எஸ்.பாபு தலைமை ! ஆர்.தசரதன், சுப்புலட்சுமி பாபு முன்னிலையில்

# பெரும்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் மு. திருநாவுக்கரசு இல்ல மணவிழா வரவேற்பு!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன், க.சுந்தர் எம்.எல்.ஏ - ஜி.செல்வம் எம்.பி வாழ்த்துரை!

காஞ்சிபுரம் பிப்:17-

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், பெரும்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் மு. திருநாவுக்கரசு சகோதரர் மடையாம்பாக்கம் எம். நல்லசிவம்,அமுதா ஆகியோரின் மகன் என். அருண் என்கிற ஐசக்கிற்கும்,சென்னை கோடம்பாக்கம்,புலியூர் புரம் ஜி. சாது,கல்பனா ஆகியோரின் மகள் எஸ். அக்சயா என்கிற ஏஞ்சல் ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி 19.2.2024 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு மேல் பி.ஆர்.திருமண மண்டபம், செய்யூரில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு இலத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.எஸ்.பாபு தலைமை ஏற்கிறார்.

பெரும்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் மு திருநாவுக்கரசு,ஆயிரம் விளக்கு 110அ வட்ட துணைச் செயலாளர் எஸ். பாரத்குமார் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர். நிகழ்ச்சிக்கு கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆர்.தசரதன்,ஒன்றிய பெருந்தலைவர் சுப்புலட்சுமி பாபு, ஒன்றிய துணை பெருந்தலைவர் கிருஷ்ணவேணி தணிகாசலம்,மாவட்ட கவுன்சிலர் ஜெயலட்சுமி மகேந்திரன்,மாவட்ட பிரதிநிதி பன்னீர்செல்வம், ஒன்றிய குழு உறுப்பினர்கள் பருவதம் வரதன்,மோகனா கோபிநாத் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மணவிழாவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர்,சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மேலும் நிகழ்ச்சியில் சிறுவேடன் ஜி.செல்வம்



எம்.பி,மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக், பனையூர் மு. பாபு எம்.எல்.ஏ, கழக மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் ஆர்.டி.அரசு, சூ.க.ஆதவன்,மு. தமிழினி,பி.ஆர். திருமலை பொன்னுரங்கம் எம்.சி, மு.மோகன்தாஸ், ஒன்றிய கழக நிர்வாகிகள்:எம்.மணி, ப.பத்மநாபன், க.அர்ஜுனன், ஜே.மகாகணபதிராமன், எஸ்.டில்லிபாபு,ஏ. வெங்கடேசன், ஓவியர் அரசு, மா.ரவேந்திரன், வேலூர் வெங்கடேசன்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்:தா. பாபு,எம்.தணிகாசலம்,பி. சுரேஷ்,எஸ்.வி. மகேந்திரன், சத்தியபாமா புருஷோத்தமன்,ஜி.எம். முனுசாமி,எஸ். ஜானகிராமன், பி. சுகன்யா,எம்.பி. கதிரவன், வி. செல்வகுமார், தென்னக செல்வன்,

கழக முன்னோடிகள்: ஆர். ரங்கநாதன்,முகையூர் எம்.பன்னீர்செல்வம், செய்யூர் என். ராஜமாணிக்கம், கருகப்பட்டு புருஷோத்தமன், இரணிய சித்திகுமார், சிறுவங்குணம் எம். வெங்கடேசன், தென்பட்டினம் ஏ. அங்கமுத்து,

ஊராட்சி மன்ற தலைவர்கள்: லோகாம்பிகை ராஜமாணிக்கம், வேலாயுதம் சசிகுமார், சுந்தரி ஜனார்த்தனன், காந்திமதி ரமேஷ், ஆர்த்தி செல்வம், இளவரசி ஜனார்த்தனன்,சுதா வாசு உள்ளிட்ட மாநில, மாவட்ட,ஒன்றிய,வார்டு உறுப்பினர்கள் கிளை கழக நிர்வாகிகள் இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மு.சிவா. மு.விநாயகம் ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

---

## தி.மு.க. தொண்டர் அணி

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### கழக தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் அறிவிப்பு!

தி.மு.க. தொண்டர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 24-2-2024 சனிக்கிழமை, காலை 11.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தி.மு.க. தொண்டர் அணி மாநில நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: **தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் மற்றும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல்**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 16.02.2024

மாஸ்டர் **பெ.சேகர்**
செயலாளர்,
தி.மு.க. தொண்டர் அணி.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் வடக்கு ஒன்றிய அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி, திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர், திருப்போரூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திருப்போரூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எல்.இதயவர்மன் தலைமையில் நடைபெற்றது. தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புசெழியன் வரவேற்புரை ஆற்றினார். திருப்போரூர் தொகுதி பார்வையாளர் பரிதிஇளம்சுருதி எம்.சி. கலந்து கொண்டு நிர்வாகிகளிடம் உரையாடினார். வடக்கு ஒன்றிய துணை செயலாளர்கள் எல்.ஜெயபால், ஏ.ரமேஷ், ஒன்றிய பொருளாளர் எஸ்.ராமகிருஷ்ணன், என்.ஜி.கெஜராஜன், க.கௌரிசங்கர், ம.ஜெகன், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற துணை தலைவர்கள், வார்டு உறுப்பினர்கள், அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள் நிர்வாகிகள், பூத் பொறுப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

---

ஆர்.தியாகராஜன் தலைமை! எஸ்.ரமேஷ்ராஜ் முன்னிலை!

பிரபாகரராஜா எம்.எல்.ஏ. வரவேற்பு!

# மதுரவாயல் 148வது வட்டத்தில் பொதுக்கூட்டம்!

## தக்கோலம் தேவபாலன் - காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, பிப்.17-

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி 148வது வட்ட இளைஞரணி சார்பில் இளைஞரணி மாநாடு தீர்மானங்கள் விளக்க தெருமுனை கூட்டம் மேட்டுக்குப்பம் சி.டி.என். நகரில் 15-02-2024 அன்று வட்ட இளைஞரணி ஆர். தியாகராஜன் தலைமையிலும் 148 வட்டக் கழக செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ்ராஜ் பி.இ முன்னிலையிலும் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் தலைமை கழக பேச்சாளர் தக்கோலம் தேவபாலன், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

இதில் மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன், ஒன்றிய செயலாளர் அ.ம.துரைவீரமணி, பொதுக்குழு உறுப்பினர் வ.செல்வகுமார், பகுதி கழக நிர்வாகிகள் வே.மதியழகன், இரா. பால்பாண்டியன், எஸ்.பாரதி, கே. ராஜி, வட்ட கழக செயலாளர்கள் த.ரமேஷ், சி.சுந்தர், எஸ்.அப்பன் (எ) சத்தியமூர்த்தி, தி.சார்லஸ், ஆர். ராதாசெல்வம், எம்.இ. ஸ்டாலின்,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் செ.ரவி,ச.சங்கர் கணேஷ், பகுதி மாணவர் அணி அமைப்பாளர் எம். மதன்ராஜ், தொகுதி மருத்துவ அணி அமைப்பாளர் ஆர்.எம்.முபாரக், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.ராஜேஷ், இரா.பா.உதயகுமார் மற்றும் 148வது வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

---

மயிலாப்பூர் உந்து நிலையத்திலிருந்து

# அடையாறு கழிவுநீர் உந்து நிலையத்திற்கு குழாய் இணைக்கும் பணி!

## குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, பிப்.17-

மண்டலம்-9 (தேனாம்பேட்டை) வடக்கு மைலாப்பூர் கழிவுநீர் உந்து நிலையத்திலிருந்து அடையாறு கழிவுநீர் உந்து நிலையத்திற்கு உந்துகுழாய் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் 17.02.2024 அன்று நண்பகல் 12 மணி முதல் 18.02.2024 அன்று நண்பகல் 12 மணி வரை வடக்கு மைலாப்பூர் கழிவு நீர் உந்து நிலையம் செயல்படாது.

எனவே, மண்டலம்-9 (தேனாம்பேட்டை)-க்குட்பட்ட கோபாலபுரம், திருவல்லிக்கேணி, மைலாப்பூர் ஆகிய இடங்களில் உள்ள இயந்திர நுழைவாயில் களில் கழிவுநீர் நிரம்பி வெளியேறும் நிலை ஏற்பட்டால் அவசரத் தேவைகளுக்காக கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் மூலம் கழிவுநீரை வெளியேற்ற கீழ்க்காணும் பகுதி அலுவலர்களை தொடர்புகொள்ளவும்.

பகுதிப் பொறியாளர் - 9 (தேனாம்பேட்டை) - கைபேசி எண்.81449 30909, துணை பகுதிப் பொறியாளர் - கைபேசி எண்.81449 30259, துணை பகுதிப் பொறியாளர் - கைபேசி எண்.81449 30225, துணை பகுதிப் பொறியாளர் - கைபேசி எண்.81449 30227.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா பிகே. ராஜகோபால்
### பிப்ரவரி 17 (2002)



திருவள்ளூர் மாவட்டம், போரூர் நகரச் செயலாளராக தொடர்ந்து முப்பது வருடங்களாக பணியாற்றியவர்.

சைதாப்பேட்டை கூட்டுறவு நிலவள வங்கியின் இயக்குனராகவும் பணியாற்றியவர்.

மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் சிறையில் இருந்துள்ளார்.


மேலும், கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை கா.ரா. சுப்பையன்
### பிப்ரவரி 17 (2019)



தனது கல்லூரி காலங்களிலேயே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

கோவை மாவட்டக் கழகச் செயலாளராகவும் – கழக தீர்மானக்குழுச் செயலாளராகவும், உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கோவை நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.